- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. "தேம்படு பனையின் திரள் பழத்தொருவிதை..." இங்கு தேம்படு என்பதன் பொருள்
   i. குளிர்நிறைந்த ii இனிமைநிறைந்த iii திரட்சியான iv மென்மையான
2. "தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினை..." இங்கு சினை என்பதன் பொருள்
   i. குளம் ii குளிர்மை iii முட்டை iv தெளிவு
3. "சிறுமீன் சினையினும் நுண்ணியதே..." என்பதில் நுண்ணியது என்பதன் எதிர்ப்பதம்
   i. பெரியது ii சிறியது iii பருத்தது iv குறுகியது
4. "கமலமது வுண்ணும்..." என்பதில் மது என்பதன் பொருள்
   i. தாமரை ii தேன் iii மதுபானம் iv இனிமை
5. "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்..." என்பதில் உறு எனப்படுவது
   i. பெரியது ii சிறியது iii பருத்தது iv குறுகியது

பகுதி 2

01. பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக

1. வெற்றிவேற்கை என்ற நூல் குறிப்பிடும் நாற்படைகளும் எவை?
2. வெற்றிவேற்கை ஆலம் விதையின் தோற்றம் குறித்து யாது குறிப்பிடுகின்றது?
3. விவேகசிந்தாமணி வண்டு, மற்றும் தவளையின் இயல்புகளாக யாது குறிப்பிடுகின்றது?
4. சமனிலைத்தொடர்களால் உருவாக்கப்படுகின்ற வாக்கியம் யாது?
5. திரிகடுகம் என்ற நீதி நூல் நன்மை தராதவையாக எவற்றை குறிப்பிடுகின்றது?

02. பின்வரும் பாடலை படித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை தருக

1. உப்பிலா கஞ்சியினை உண்ணும் அறுசுவைபோல்
   தப்பிய கந்தை பீதாம்பரம்போல் ஒப்பும்
   பனையோலை பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
   மனங்கொண்டது மாளிகை

   i. மேற்குறித்த பாடல் இடம்பெற்ற நூலை எழுதியவர் யார்?
   ii. அப்பாடல் மனநிறைவு தரும் செயல்களாக எவற்றை குறிப்பிடுகின்றது?
   iii. அந்தப்பாடலில் இடம்பெறும் முதுமொழியை குறிப்பிடுக

2. யானை அனையவர் நண்பொரீஇ நாயனையர்
   கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் யானை
   அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
   மெய்யதா வால்குழைக்கும் நாய்

   i. இப்பாடல் இடம்பெற்ற இலக்கித்தின் பெயர் யாது?
   ii. இப்பாடல் உத்தம நட்பாக எதனை குறிப்பிடுகின்றது? அதற்காக முன்வைக்கும் காரணம் என்ன?